ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2123/78 - 2019 මැයි මස 17 වැනි සිකුරාදා - 2019.05.17

*2123/78 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (அ) ஆம் பிரிவின் கீழ் மஹியங்கனை பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

*மஹியங்கனை பிரதேச சபைக்குத் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்ட உறுப்பினர் ஒருவரின் பதவி, கேட்டு விலகியமை காரணமாக வெற்றிடமாகியிருக்கின்றதாதலாலும் ;*

*மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (அ) ஆம் பிரிவின் கீழ், மஹியங்கனை பிரதேச சபையின் இலக்கம் 06 தம்பான வட்டாரத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட திசாநாயக்க முதியன்சேலாகே ஷியாமலி குமாரி திசாநாயக்க என்பவர் அங்கம் வகிக்கின்ற சுயேச்சைக் குழுவின் தலைவருக்கு முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அச்சுயேச்சைக் குழுவைச் சேர்ந்தவரும் அவ் மஹியங்கனை பிரதேச சபையின் இலக்கம் 06 தம்பான வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;*

*மேலே கூறப்பட்ட சுயேச்சைக் குழுவின் தலைவரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக அக்குருகொட களு ஆரச்சிலாகே மானெல் அஷோகமாலா களுஆரச்சி என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;*

இப்போது, மஹியங்கனை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான எச். ஐ. ஆர். ஹத்துருசிங்ஹ ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 66அ(1) (அ) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு அக்குருகொட களு ஆரச்சிலாகே மானெல் அஷோகமாலா களு ஆரச்சி என்பவர் மஹியங்கனை பிரதேச சபையின் இலக்கம் 06 தம்பான வட்டாரத்தின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

எச். ஐ. ஆர். ஹத்துருசிங்ஹ,
தெரிவத்தாட்சி அலுவலர்,
மஹியங்கனை பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
பதுளை,
2019, மே 16.

05-944